அந்த வகையிலே இந்தச் சாலையையும் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் எடுத்து அகலமங்கலம், தலைஞாயிறு சாலைகளை செப்பனிட்டு டவுன் பஸ் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையிலிருந்து அங்கு இருக்கக்கூடிய நிதியை வைத்துக்கொண்டு சாலையை செப்பனிட முடியுமா என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு தனிக் கேள்வி போட்டு அவர் அதை உடனடியாக செப்பனிட்டவுடனே நான் அந்தப் பணிகளைச் செய்ய முடியும். எங்களுடைய பேருந்துகளைப் பொறுத்தவரையில் பள்ளப் பகுதியாக இருப்பது உங்களுக்கே தெரியும். மழையின் காரணத்தினால்தான் சாலைகள் அரிக்கப்பட்டு பேருந்துகளை இயக்க முடியவில்லை. நீங்கள் வேண்டுமானால் ஓரளவுக்கு அந்தப் பள்ளப் பகுதியை நிரப்பினால் பேருந்துகளை இயக்க முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொண்டால் அடுத்த நாளே பேருந்தை இயக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ஆ) வெளிநாடுகளுக்கு 'வெங்காயம்' ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடைவிதித்துள்ளதால் விவசாயிகள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவனஈர்ப்பு, திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலிருந்து வெங்காயம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு திடீரென்று தடை விதித்ததால் விவசாயிகளிடையே ஏற்படும் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1995 ஏப்ரல் 18]

***மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தமிழ்நாட்டில் வெங்காயம் 24,596 ஹெக்டாரில் சாகுபடி செய்யப்பட்டு 2.03 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் பயிராகும் வெங்காயத்தில் கிருஷ்ணாபுரம், பொடிசு, முட்லூர், நாட்டு வெங்காயம் போன்ற ரகங்கள் மட்டுமே 15,200 மெட்ரிக் டன் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் விளையும் வெங்காயமும் சென்னை துறைமுகத்தின் மூலமே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டில் அக்டோபர் மாதத்தில் வெங்காயம் விலை கிலோ ரூ. 20/- வரை விற்றபோது மத்திய நுகர்பொருள் வழங்கு துறையின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய வேளாண்மை அமைச்சகம் 51 சதவிகிதம் வரை ஏற்றுமதியினை குறைத்து நம் நாட்டின் விநியோகத்திற்கு வெங்காயம் நியாயமான விலையில் கிடைக்க நடவடிக்கை எடுத்தது.

இந்தியாவிலிருந்து, அரபு நாடுகள், மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஷ், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளுக்கு 3.70 இலட்சம் மெட்ரிக் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதி மதிப்பு ரூ. 17,300 லட்சம் ஆகும். 'பொடிசு' எனப்படும் சிறிய வெங்காயமும் மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய பகுதிகளில் பயிராகும் சிகப்பு வெங்காயமும் ஏற்றுமதியாகிறது.

இந்த நடவடிக்கையினால் விளைபொருளைப் பதுக்கி வைப்போரும், இடைத்தரகர்களும்தான் பாதிக்கப்படுவார்கள். உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஏற்றுமதித் தடையினால் எந்த பாதிப்பும் ஏற்படாது. தற்சமயம் வெங்காயம் ஏற்றுமதிக்கு எவ்வித தடையும் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் 51 சதவிகிதம் வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது என்றும் அதனால் வெங்காய ஏற்றுமதியில் பாதிப்பு இல்லை என்றும் சொன்னார்கள். இந்த வெங்காயம் வியாபாரம் செய்பவர்கள் முழுக்க முழுக்க சிறு விவசாயிகள்தான். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் வெங்காய உற்பத்தி அதிகமாக

இருக்கிறது. விவசாயத்தில் புரட்சி செய்யும் இந்த அரசில் வெங்காய ஏற்றுமதி குறைவாக இருக்கிற காரணத்தினால், வெங்காயம் நீர்த்தேக்கம் போல தேங்கி இருக்கிறது. அதனால் சிறு விவசாயிகள் எல்லாம் சேர்ந்து கோபம் கொண்டு வெங்காய கவர்மெண்ட் நடத்துபவர்களின் கண்களில் வெங்காயத்தை அறுத்துப் பூசுகிற அளவில் போராட்டம் நடத்தக்கூடிய நிலை இருக்கிறது. எனவே 100 சதவீதம் வெங்காய ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அக்டோபர் மாதம் உள்நாட்டிலே வெங்காய விலை அதிகமாக இருந்தது. மத்திய வேளாண் அமைச்சகம் 51 சதவீதம் வரை ஏற்றுமதியினை குறைக்கவேண்டும் என்று ஒரு தடையை விதித்திருந்தது. உடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் எழுதி அந்தத் தடையை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இப்போது அந்தத் தடை இல்லை. எனவே 100 சதவீதம் வேண்டுமானாலும்கூட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் சிறு விவசாயிகளின் சார்பில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வெளிநாடுகளுக்கு வெங்காயம் 100 சதவீதம் ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முறையிட்டதின்பேரில் மத்திய அரசு ஒப்புதல் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில் அதிகமாக வெங்காயம் ஏற்றுமதி ஆவதால், மத்திய அரசு ஏற்றுமதி கவுன்சில் ஒன்றை சென்னையில் வைத்து அதற்கு வேண்டிய அலுவலகம் திறந்து வெங்காயத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திண்டுக்கல்லிலே ஒரு நிறுவனம் இதற்காகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இதனுடைய பணி பரந்து விரிந்து செயல்படவேண்டுமென்று அவர்களை இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.